*1994 ஏப்ரல் 8]*

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மூன்று ஆண்டுகாலத்திற்கு முன்பு அப்படிப்பட்ட நிலை இருந்தது. காரணம் எம்.பி.பி.எஸ்.சிறகாகத் தேர்ந்தெடுக்கப் படுகிறவர்களே-எம்.பி.பி.எஸ்.-சிலே ஏறத்தாழ 1072 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். பல் மருத்துவக் கல்லூரியிலே 45 பேர்கள் சேர்க்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள் எனவே, அப்படி எடுக்கிறபோது, முதல் மாணவனாக எம்.பி.பி.எஸ்.-க்குத் தேர்ந்தெடுக்கப்படுகிற மாணவனே பி.டி.எஸ்-க்கும் தேர்ந்தெடுக்கிற ஒரு நிலை இருந்தது. எனவே, 1072 பேர்களையும் ஒவ்வொருவராக அவர்களுக்கு ஆர்டர் கொடுத்து வந்து அவர்கள் சேருகிறார்களா, இல்லையா என்று பார்த்து கடைசியில்தான் உண்மையாக வந்து சேரக்கூடியவர்களுக்கே ஆர்டர் போய்க் கிடைக்கிற நிலை இருந்தது. இப்போது அந்த நிலையை நாங்கள் மாற்றி இருக்கிறோம். இப்போது அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டு இருக்கிறது. எனவே, ஓரளவிற்கு பிரச்சினை இல்லாமல் அத்தனை இடங்களையும் நிரப்புவதற்கான ஏற்பாட்டை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். அந்த 45 இடம் கூட 60-ஆக உயர்த்தப்பட்டு, மீண்டும் 80 ஆக உயர்த்தப்பட்டு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 226, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

*226--*

## அவினாசி தொகுதியில் சேரன் போக்குவரத்துக் கழகப் பணிமனை கட்டுதல்

***21521- டாக்டர் மு. சீனியம்மாள்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர். கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அவினாசி தொகுதியில் சேரன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பணிமனை கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அவினாசி தொகுதியில் உள்ள அன்னூரில் சேரன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பணிமனை ஒன்று அமைத்திட

நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, ஒப்படைப்பு செய்யப்படும் நிலையில், நிலச் சொந்தக்காரர்கள் நிலம் ஒப்படைப்பு செய்ய சென்னை உயர்நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றுள்ளார்கள். மேற்படி இடம் ஒப்படைப்பு செய்யப்பட்டபின் பணிமனை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**டாக்டர் மு. சீனியம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பாசமிகு அமைச்சர் அவர்கள் நமது வீரத் தலைவியினுடைய உத்தரவைப் பெற்று, அன்னூரிலே சேரன் போக்குவரத்துக் கழக டெப்போ அமைக்கப்படும் என்று கூறியதற்காக நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நான் அவினாசியிலே டெப்போ கட்டப்படுமா என்று கேட்டிருக்கிறேன். அவினாசி தொகுதி என்பது மிகவும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டு, நமது அரசும், அண்மையிலுள்ள கோவை, திருப்பூர், ஈரோடு, பல்லடம் போன்ற நகரங்களிலிருந்து தொழிலை ஏற்படுத்த விரைந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பனியன் தொழிலில் 20 ஆயிரம் கோடிக்கு மேல் அன்னியச் செலாவணியை ஈட்டித்தரும் திருப்பூர் நகருக்கு, மேட்டுப்பாளையம், அன்னூர், அவினாசி, சேவூர், பெரியார் மாவட்டத்தில் உள்ள புளியம்பட்டி நகரங்களிலிருந்து அதிகமானோர் வேலைக்குச் சென்று வருகின்றனர். ஏற்கெனவே அவினாசியில் சேரன் போக்குவரத்துக் கழக டெப்போ அமைப்பதற்கு நிலம் தேர்வு செய்ய தாமதம் ஆன காரணத்தால், கட்டப்படவில்லை என்று எம்.டி. அவர்கள் தகவல் கூறினார்கள். ஆயிரம் பேர்களுக்கு மேல் இருந்தால், ஒரு பேருந்தைப் போட்டு, முதன்முதலாக அவனாசியிலே பெண்களுக்கு என்று தனிப் பேருந்தை விட்டு சாதனை படைத்த தனிப் பெரும் தலைவியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிற எங்கள் வெற்றித் தலைவியினுடைய ஆட்சியில், இரவில் பேருந்துகள் அவினாசியில் வந்து, 'நைட் டிரிப்புக்கு' திருப்பூர் செல்வதால் அதிகாலையில் மக்கள், தொழிலுக்கு அடித்துப்பிடித்துச் செல்லவேண்டியதாக இருக்கிறது. பெரும்பாலோர் தொழிலுக்கு நேரத்திற்கு போகமுடியாத சூழ்நிலை இருக்கிறது. அங்கே ஒரு டெப்போ கட்டிக்கொடுக்கும் பட்சத்தில் அவினாசியை வளம் கொழிக்கும் தாலுகாவாக மாற்ற இயலும். சாலைவசதியும் பணிமனை வசதியும் பக்கத்தில் இருந்தால், முன்னேற்றம் அடையும் என்கிற கருத்தைக் கொண்டு, நமது அன்னையினுடைய ஆணையை சிரமேல் வைத்து.... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி கேட்க வேண்டும்.

*1994 ஏப்ரல் 8]*

*முற்பகல் 10-20*

**டாக்டர் மு. சீனியம்மாள்:** அவினாசியிலே பணிமனை அமைத்துத்தர நமது அமைச்சரவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதியில் நீங்கள் கேட்டிருந்தீர்கள். அவினாசி தொகுதிக்கு உட்பட்டதுதான் அன்னூர். ஆகவே அந்த அன்னூரிலே அவினாசி தொகுதி என்று மொத்தமாகக் கேட்டவுடனேயே அன்னூர் பகுதியிலே இந்தப் பணிமனையை அமைப்பதற்கு நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்காக நாங்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டோம். அப்போது உயர்நீதிமன்றத்திலே அதற்கு தடை வாங்கியிருக்கிற காரணத்தினாலே உயர்நீதிமன்றத்தினுடைய தடை நீங்கியவுடனேயே நாங்கள் அதை உடனே கட்டுகிறோம் என்று சொன்னோம். மாண்புமிகு உறுப்பினர் கேட்பது அவினாசியிலே கட்டப்படுமா என்பது தான். அவினாசிக்குப் பக்கத்திலே திருப்பூர் இருக்கிற காரணத்தினாலே-12 கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது. அத்தோடு பக்கத்திலே புளியம்பட்டி, கருமத்தம்பட்டி இருக்கிறது.--சுற்றிச் சுற்றி பணிமனைகள் இருக்கின்ற காரணத்தால் அவினாசியிலே தேவையில்லை என்ற ஒரு கருத்து எங்களுக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மீண்டும் அரசு பரிசீலித்து முடிவுகள் மேற்கொள்ளும்.

**டாக்டர் மு. சீனியம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாவட்ட ஆட்சித் தலைவரால் அவினாசியில் இடம் தேர்வு செய்யப்பட்டு அவினாசியிலிருந்து திருப்பூர் போகின்ற வழியில் சேரன் போக்குவரத்துக் கழகம் டெப்போ கட்டுவதற்குரிய நிலம், இடம் தேர்வு செய்யப்பட்டு, அறிக்கை எல்லாம் தாக்கல் செய்யப்பட்டு, எம்.டி. அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அன்னூரிலே இடம் கிடைக்காத காரணத்தினாலே அதை அவினாசிக்கு மாற்றித் தந்து அமைச்சரவர்கள் டெப்போ கட்டுவதற்கு அன்னையினுடைய உத்தரவு பெற்றுத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற குறிப்புகள் எனக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினருடைய குறிப்பில் அதுபோன்று இருக்குமேயானால் ஒரு வார காலத்திற்குள்ளாக

மாவட்ட ஆட்சித் தலைவர், சேரன் போக்குவரத்துக் கழக நிர்வாகத்தினிடத்திலே பேசி நல்ல முடிவுகளை இந்த அரசு மேற்கொள்ளும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 227, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

*227--*

**நாகப்பட்டினம் துறைமுகத்தை நவீனப்படுத்துதல்**

****23405*–திருமதி கே. மரியம் உல் ஆசியா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கும், நவீனப்படுத்துவதற்கும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர். டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றத்திற்கு அழைத்துச் செல்லவேண்டுமென்ற எண்ணத்தின் காரணமாக பல சீர்த்திருத்தங்கள் செய்து, தமிழகம் முன்னேறுவதற்காக அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் நான் கேட்ட கேள்விக்கு 'ஆம்' என்று பதில் சொல்லியிருக்கின்றார்கள். அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். மேலும் 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற தமிழ் மூதுரைக்கு ஏற்ப பன்னெடுங் காலமாக பெருமளவில் கடல் வணிகம் நடந்து வந்த நாகப்பட்டினம் துறைமுகத்தை ஒட்டியுள்ள பனங்குடியில், அந்த கிராமத்தில் எம்.ஆர்.எல். என்ற சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் காவிரிப் படுகையில் கிடைக்கும் எண்ணையை சுத்திகரிக்க எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை அமைக்கும்போது, கச்சா எண்ணெயை இறக்குமதி செய்வதன் மூலம் இந்த ஆலையை விரிவுபடுத்தமுடியும் என்பதாலும் மேலும் வெளிநாடுகளில் சரக்கு போக்குவரத்துகளை நடத்துவதற்கு வசதியாக இருக்கவேண்டும் என்பதாலும் நாகப்பட்டினம் துறைமுகத்தை வெளிநாட்டில் இருப்பது போல்-ஏனென்றால் நாகப்பட்டினம்